**ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் - 2016/2017**

--------------------------------------------------------------------------------

ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் ("கம்பனி") 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவகமொன்று எனக்கு உதவியிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. கம்பனியின் விபரமான அறிக்கையொன்று 2017 செப்தெம்பர் 13 இல் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ்) 36 – சொத்துக்களின் காலக்கழிவு

காலக்கழிவு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டோ அல்லது அது தொடர்பான சபை தீர்மானம் எடுக்கப்பட்டோ இருக்கவில்லை. ஆகையால், மத்தல விமான நிலைய செயற்பாடுகளிற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டிற்காகவும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 59,534,711 கிரயத்தின் 20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 11,241,785 காலக்கழிவு ஏற்பாடு தொடர்பான பூரணத்தன்மை மற்றும் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.2.2 தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள்

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 10,571 மில்லியன் தொகையான கம்பனியின் மொத்தச் சொத்துக்களில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட்டிடமிருந்து (''தாய்க் கம்பனி'') பெறப்பட வேண்டிய தொகையானது கம்பனியின் மொத்தச் சொத்துக்களில் 63 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 6,707 மில்லியன் தொகையாக இருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2..3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 7.4.5 ஆம் பந்தி | 2016/2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 9.2 (ஈ) பந்தி | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் பதவியணியினர் என்பன பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.3.1(i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவு**

கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 3,637,855,159 இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 3,736,386,777 தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 98,531,618 அதிகரிப்பொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. விமான சமையலறை வருமானம் ரூபா 555,640,220 ஆல் அதிகரித்தமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான கம்பனியின் முக்கியத்துவமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **2016/17** | **2015/16** | **2014/15** | **2013/14** | **2012/13** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் (தடவைகளின் எண்ணிக்கை) | 8.76 | 9.74 | 9.50 | 8.72 | 6.19 |
| விரைவு விகிதம் | 8.46 | 9.43 | 9.03 | 8.26 | 5.62 |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 0.19 | 0.21 | 0.44 | 0.55 | 0.63 |
| ஈபிஎஸ் - பங்கொன்றிற்கான உழைப்பு | 3.97 | 3.87 | 2.33 | 2.41 | 1.51 |
| பங்கொன்றிற்கான பங்கிலாபம் | 3.38 | 3.29 | 2.23 | 1.36 | 2.39 |
| மொத்த இலாபம் | 77% | 77% | 76% | 75% | 77% |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 46% | 49% | 37% | 49% | 38% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறைப் பொறுப்புக்களிற்கான நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன பிரதானமாக வியாபார செலுத்த வேண்டியவைகள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது.

(ஆ) பங்கொன்றிற்கான உழைப்புக்கள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் வரிக்கு பின்னரான இலாபம் அதிகரித்தமை காரணமாக முறையே 10 சதம் மற்றும் ரூபா 1.54 ஆல் அதிகரித்திருந்தன. எனினும், பங்கொன்றிற்கான உழைப்பின் ஒப்பீட்டளவிலான வளர்ச்சி விகிதம் 96 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அமைப்பு அகவிதியின் பிரகாரம், விமான சமயலறைகளை பராமரித்தல் மற்றும் செயற்படுத்துதல், விமானப் பிரயாணிகளால் வேண்டப்பட்டவாறு உணவுகள், பானங்கள் மற்றும் அத்தகைய ஏனைய உணவுப்பொருட்களை வழங்குதல் தொடர்பான வணிகத்தை மேற்கொள்ளுதல், விமானங்களிற்காக பிரயாணிகள் காத்திருக்கும் இடங்களை (passengers lounges) செயற்படுத்துதல், பண்டகசாலைகள், இணைந்த களஞ்சியங்கள் போன்றவற்றை பெற்று வழங்குதல் மற்றும் சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவகங்கள் போன்றவற்றின் உரிமையாளர்களாக வணிகத்தை மேற்கொள்ளுதல் என்பன கம்பனியின் நோக்கங்களாக உள்ளன. கம்பனியின் ஒவ்வொரு உற்பத்திப் பிரிவினதும் விற்பனை வருமானம் மற்றும் இலாபம் / (நட்டம்) பின்வருமாறு உள்ளன.

| **வருமான மூலம்** | **மொத்த வருமானம்** | **ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)** |
|---|---|---|
| | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** |
| விமான சமையலறை | 5,526.50 | 3,053.39 |
| பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய (பீஜஏ) உணவகம் | 1,104.49 | 479.31 |
| வனிலா பொட் | 22.23 | 5.35 |
| செமொண்டு உணவகம் | 78.36 | 4.09 |
| ட்ரான்சிற் ஹோட்டல் | 113.69 | 36.25 |
| எமிரேட்ஸ் லோன்ஞ் | 143.39 | 72.62 |
| மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஜஏ) உணவகம் | 28.84 | (10.14) |
| லோன்றி | 198.63 | 95.51 |
| மொத்தம் | 7,216.13 | 3,736.39 |

மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய (எம்ஆர்ஜஏ) உணவகம் மீளாய்வாண்டின் போது மொத்த வருமானத்தில் 35 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துக்கின்ற ரூபா 10.14 மில்லியன் நட்டத்தை அடைந்திருந்தது.

**4.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் சபை அங்கீகரித்த பதவியணியினர் 1,046 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 1,022 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 24 வெற்றிடங்கள் காணப்பட்டன. எனினும், சிரேஷ்ட, நடுத்தர மற்றும் குறைந்த மட்டம் அல்லது தனித்தனியான சேவை வகைப்படுத்தல்கள் இனங்காணப்படாமல் கம்பனியின் பதவியணியினர் மொத்த பதவியணியொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்**

2030 ஆம் ஆண்டிற்கான ''நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்'' நிகழ்ச்சி நிரல் தொடர்பாக ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் அறிந்திருக்காததால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான இலக்கு கட்டங்களுடன் சேர்த்து அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பான இலக்குகள் மற்றும் அத்தகைய இலக்குகளை அடைந்துகொள்வதை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **கட்டுப்பாட்டுப் பரப்பு** | **அவதானிப்பு** |
|---|---|---|
| (அ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சினால் பதவியணியினர் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பன அங்கீகரிக்கப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | கம்பனியில் முறையான சொத்துக்கள் குறியீடு இடுதல் முறைமை காணப்படாமை மற்றும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை |
| (இ) | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் | கிடைக்கக்கூடிய அனைத்து முறைமைகளையும் பயன்படுத்துநர் உள்நுழைவு அதிகாரங்களை (User access rights) வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புக்கள் கிடைக்கப்பெற்றிருக்காததுடன் பயன்படுத்துநர் உள்நுழைவு அதிகாரங்களின் முறையான காலரீதியான மீளாய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்பாட்டிலுள்ள கோப்பகத்திற்கான கடவுச் சொல் மற்றும் கணக்கு உள்ளமைவுகளை பூட்டுதல் (account logout configurations) என்பன மிகச் சிறந்த நடைமுறைகளுடன் ஒத்திருக்கவில்லை. |
| (ஈ) | கணக்கீட்டு முறைமை | முறைமையில் நாட்குறிப்பு பதிவுகள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் தொடர் வரிசை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |